[29th March 1958

Sri N. K. PALANISAMI : ஆவடியில் அந்தத் தொழிற் சாலையை வைக்கலாம் என்று நிபுணர் கமிட்டி சொல்லியிருந்தும்கூட அங்கு வைக்காமல் போபாலில் வைக்கக் காரணம் என்ன ? ஆவடியில் வைக்கவேண்டும் என்பதாக மத்திய சர்க்காரிடம் ஏதாவது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதா ?

The Hon. Sri V. RAMIAH : ஆவடியில் வைக்கவேண்டும் என்பது தான் நம்முடைய அரசாங்கத்தினுடைய கோரிக்கை. அதை வலியுறுத் திச் சொல்லிவந்தோம். ஆனால் நிபுணர் கமிட்டியால் அதையெல்லாம் பரிசீலனை செய்து இப்பொழுது தேர்ந்தெடுத்திருக்கும் இடம் மிகவும் சிறந்த இடம் என்று முடிவு செய்து அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருக் கிறது.

Sri K. ANBAZHAGAN : பிற மாகாணங்களைவிட சென்னை மாகாணம் தான் மின்சார விநியோகம் சம்பந்தப்பட்ட வரையில் தலைசிறந்து விளங்கு கிறது என்று சொல்கிற இந்த அரசாங்கம் வேறு இடத்திலே ஒரு கனரகத் தொழிற்சாலையை வைத்தால் சென்னை மாகாணத்திலும் ஒரு கனரகத் தொழிற்சாலை இருக்கவேண்டுமென்று வலியுறுத்தி, இரண்டாவதாக ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துமா ?

The Hon. Sri V. RAMIAH : இரண்டாவது தொழிற்சாலை அமைப்ப தாக முடிவு வந்தவுடனே மீண்டும் இதை வலியுறுத்துவோம் என்று நான் உறுதியளிக்கிறேன்.

Sri K. VINAYAKAM : What were the considerations which weighed with the expert team to come to the conclusion that Avadi was not suitable for starting this industry whereas our Government recommended the starting of this industry at Avadi?

The Hon. Sri V. RAMIAH : The Expert Committee have not come to the conclusion that Avadi is not suitable but they have come to the conclusion that the present site is better.

Fire accidents

* 464 *Q*.—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of fire accidents in the Tiruchirappalli district during the last five years;

(*b*) the number of houses damaged by fire;

(*c*) the estimate of damage;

(*d*) the number of Fire Service Stations in the district;

(*e*) whether the Government have received representation from the Tiruchirappalli District Planning Board to provide Fire Service Stations at Perambalur and Ariyalur; and

(*f*) if so, the action taken thereon?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*)

Year.	Total number of fire accidents.
(1)	(2)
1953	193
1954	192
1955	228
1956	223
1957	218

29th March 1958]

(*b*) & (*c*) The extent of damage caused by fire to houses, human lives, cattle, and property for the last five years is as shown below :—

Year.	Number of houses damaged.	Number of human lives lost.	Number of cattle lost.	Value of damage caused to houses and other properties.
(1)	(2)	(3)	(4)	(5)
				RS.
1953 ..	1,788	5	..	3,36,365
1954 ..	865	5	..	1,94,209
1955 ..	1,954	3	1	7,09,382
1956 ..	1,128	3	..	4,22,682
1957 ..	1,059	6	1	1,49,372

(Separate figures for value of damage caused to *houses alone* are *not* available.)

(*d*) Three (at Tiruchirappalli, Karur and Pudukkotai).

(*e*) No, Sir.

(*f*) Does not arise.

SRI S. LAZAR : இப்போது கொடுத்த புள்ளி விவரங்களில் இருந்து ஏராளமான தீ விபத்துக்கள் உண்டாகின்றன என்று தெரிகிறது. அதுவும் திருச்சி ஜில்லாவின் வடக்கு பாகத்தில் பெரம்பலூர், உடையார்பாளையம் பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் தீ விபத்து ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்காக சர்க்கார் இன்னும் பல லட்சக்கணக்கான ரூபாய்களைச் செல வழிக்க முன்வரும்போது இன்னும் ஒரு பையர் ஸ்டேஷனை பெரம்பலூரில் வைக்கும் உத்தேசம் உண்டா ? அதுமாதிரியாக ஜில்லா சூப்பிரண் டென்டென்டிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரியலூரிலும், பெரம்பலூரி லும் வைக்கவேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறது. நிதி நிலை மையையொட்டி இந்தக் கொரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI T. SAMPATH : Has any representation been received from the members of the Fire Service Squad for the raising of their basic pay and, if so, may I know the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That is a different question. Notice may be given.

SRI A. GOVINDASAMY : அமைச்சர் சொன்ன பதிலில் இருந்துகிட்டத் தட்ட 22 பேர்கள் தீவிபத்தினால் இறந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அது விஷயம் அவ்வப்போது கவனிக்கப்பட்டிருக்கும்.

SRI V. SUBBIAH : அரியலூர் பஞ்சாயத்து போர்டு நிர்வாகத்திலி ருந்து இதற்கு ஆகும் செலவை ஒப்புக்கொண்டு தங்கள் நிர்வாகத்திலேயே வைத்துக்கொள்வதாக மனு வந்திருக்கிறதா என்று கேட்க விரும்பு கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரியலூரைப்பற்றி முன்பு சொன்னேன்.

[29th March 1958

SRI K. PERIANNAN : கனம் சபாநாயகர் அவர்களே, பெரம்பலூர் தாலுக்கா மிகவும் பிற்பட்ட காடாரம்பப் பிரதேசமாக இருந்தும் இந்த நெருப்பு அணைக்கும் படை நிலையம் திருச்சி தலைநகரத்திலிருப்பதால் இங்கே தீப்பிடித்த சமாச்சாரம் தெரிந்த உடனேயே அவர்கள் கிளம்பினாலும் இருபது மைல், முப்பது மைல் வருவதற்குள் இங்கே கிராமங்கள் எல்லாம் எரிந்து சாம்பலாகிப் போய்விடுகின்றன என்கிற விஷயம் அரசாங்கத்திற்குத் தெரியவருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதையெல்லாம் கவனித்தே திருச்சி ஜில்லா கலெக்டர் பெரம்பலூரில் பயர் ஸ்டேஷன் வைக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்.

SRI S. LAZAR : பெரம்பலூர், அரியலூர் இங்கே பயர் ஸ்டேஷன் வைக்கவேண்டுமென்ற கோரிக்கை நிதி நிலைமையை அனுசரித்து பரிசீலிக்கப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஸ்ரீரங்கத்தில் பயர் ஸ்டேஷன் ஏற்படுத்தப்போவதாகத் தெரிகிறது. திருச்சிக்கு அருகில் இரண்டு மைலில் ஸ்ரீரங்கம் இருப்பதால் அங்கே ஏற்படுத்தப் போவதை பெரம்பலூரில் ஏற்படுத்துவதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : என்னிடத்திலுள்ள தகவலில் இருந்து ஸ்ரீரங்கத்தில் ஏற்படுத்தப் போகிறார்களா, இல்லையா என்று தெரியவில்லை, பொதுவாக ஓரிடத்தில் இருப்பதை இன்னொரு இடத்திற்கு மாற்றும்படியாகச் சொல்லவேண்டாம். இந்த இடத்தில் வேண்டுமென்றால் அது தனியாகவே பரிசீலித்து ஏற்படுத்தப்படும்.

SRI A. GOVINDASAMY : நான் கேட்ட கேள்விக்கு அவ்வப்போது கவனித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மந்திரி அவர்கள் சொன்னார்கள். நான் கேட்ட கேள்வி இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறதா என்பது தான் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது எல்லாம் அவ்வப்போது கலெக்டர்களால் கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்று மீண்டும் சொல்கிறேன்.

Edward Textile Mills

* 465 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the steps taken by the Government to reopen the Edward Textile Mills, Madras ; and

(*b*) the number of persons thrown out of employment due to the closure of the mills?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The management of Edward Textile Mills notified in November 1957 that the mills would be closed with effect from 8th December 1957. However, to avert complete closure, the Workers' Union and the management came to a settlement on 5th December 1957. The parties agreed to run one shift of the Spinning section to start with and run the second shirt as soon as possible. They also agreed to the closure of the Weaving Section as it was uneconomic to continue that section. Due to the closure of the Weaving Section, 250 workers were discharged.